# தொழில் அமைச்சு

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

# பதவி வெற்றிடங்கள்

தொழில் அமைச்சுடன் இணைக்கப்பட்ட, 2009 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு பொருத்தமான தகைமை வாய்ந்த இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது): 04 பதவிகள்**

**1.1 நியமனத்தின் தன்மை**

i. சேவை வகை : முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது)

ii. சம்பளக் குறியீடு : MA 1 -1-2025 தரம் III

iii. சம்பள அளவுத் திட்டம் : ரூ.46,220-10X 540-7X 630–4X 890- 20X 1190-83,390

**1.2 ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்::**

**1.2.1 கல்வி**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான கல்வித் தகைமைகள்**

1. கல்விப் பொதுத்தராதர பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ், கணிதம், ஆங்கில மொழி எனும் பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

ii. கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர்தர) பரீட்சையில்; குறைந்தது 03 பாடங்களில் (பொது சாதாரண பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான கல்வித் தகைமைகள்**

· ஆரம்ப தர – திறன் சேவை பிரிவுகளில் பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்

i. கல்விப் பொதுத்தராதர பத்திர (சாதாரணதர) பரீட்சையில்; சிங்களம் / தமிழ், கணிதம், ஆங்கிலம் எனும் பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

ii. பதவி நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதுடன் அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும்.

iii. குறித்த திகதிக்கு முன்னர் நிலையான பதவியின் கீழ் 05 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

1.2.3 வயது: விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று 18 ஆண்டுகளுக்குக் குறையாமலும் 45 ஆண்டுகளுக்கு அதிகமாகாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.

1.2.4. மற்றவை: ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் ஒழுங்காகச் செய்வதற்கும் நாட்டின்; எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் உகந்த தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

III. சிறந்த நடத்தை கொண்டவராக இருக்க வேண்டும்

**1.3 ஆட்சேர்ப்பு நடைமுறை**: கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு

**வேலைவாய்ப்பு நிபந்தனைகள்**

இந்த நியமனங்கள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரித்துடையவை.

**ஆட்சேர்ப்பு செய்யும் போது சம்பளம்**

வெளிவாரி விண்ணப்பதாரர்களிடையே ஆட்சேர்ப்பு செய்யும் போது சம்பந்தப்பட்டவர் சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படியில் வைக்கப்படுவார். உள்வாரி விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது தாபிக்கப்படவேண்டிய வேண்டிய சம்பள அளவுத்திட்டம் தாபனக் கோவையின் VII அத்தியாயத்தின் விதிகளின்படி தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் **2025/08/15** அன்று அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், தேசிய தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், இலக்கம்; 97, ஜாவத்த வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பித்தால், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் தொடர்புடைய பதவி குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதித் திகதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதி**

பதவியில் நியமிக்கப்படுவதற்காக விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படுவது விண்ணப்பதாரர் மேலே குறிப்பிடப்பட்ட தேவையான தகைமைகளை விண்ணப்ப இறுதித் திகதி **2025/08/15** ஆகும் போது எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே ஆகும்.

இந்தப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி தீர்மானம் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் நிர்வாகக் குழு வசமானது.


தொலைபேசி இலக்கம்:- 011- 2585425 / 011 – 598672

மின்னஞ்சல்:- info@niosh.gov.lk
இணையதளம்:- www.niosh.gov.lk

முகவரி:- பணிப்பாளர் நாயகம்
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம்
இலக்கம் 97
ஜாவத்த வீதி
கொழும்பு 05